தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 27-2-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பழங்குடி விவசாயிகளுக்கான பயிற்சி

சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலூகாவில் அமைந்துள்ள தவளப்பட்டி கிராமத்தில், 5 லட்சம் ரூபாய் மதிப்பில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விதை மையத்தின் சார்பாக “சிறுதானியங்களை பதப்படுத்தி மதிப்புக் கூட்டும் மையம்” பழங்குடி மக்களுக்காக நிறுவப்பட்டுள்ளது.

இம்மையத்தை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு.இராமசாமி அவர்கள் 21-2-2016 அன்று திறந்து வைத்து சோதனை ஓட்டத்தை நடத்தி வைத்தார். அதனைத் தொடர்ந்து ஒரு நாள் பயிற்சி மற்றும் கருத்தரங்கு நடைபெற்றது. இந்த கருத்தரங்கில் பழங்குடி விவாசயிகளுக்கு சிறுதானிய மதிப்பு கூட்டும் இயந்திரங்களை இயக்குவதற்கான பயிற்சி மற்றும் செயல்விளக்கம் வழங்கப்பட்டது.

இப்பயிற்சி முகாமின் போது சிறுதானிய விதை தொழில் நுட்பங்கள், சிறுதானியத்தில் மதிப்பு கூட்டும் பொருட்கள் மரவள்ளி மற்றும் ஆமணக்கு சாகுபடி தொழில் நுட்பங்கள், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, மண் பரிசோதனை மற்றும் கால்நடை மருத்துவ முகாம் தொடர்பான கண்காட்சியும் நடத்தப்பட்டது. வேளாண்மை பல்கலைக் கழக விஞ்ஞானிகள் சாகுபடி தொழில்நுட்பங்கள, அதன் பயன்கள் மற்றும் மதிப்பு கூட்டும் பொருட்கள் ஆகியவை பற்றி உரை நிகழ்த்தினர். சுமார் 400 பழங்குடி விவசாயிகள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்று பயன் பெற்றனர். இந்நிகழ்ச்சியின் போது சிறுதானிய பயிர் விதைகளும் வழங்கப்பட்டது.

இத்தொடக்க விழா மற்றும் பயிற்சி முகாமை கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விதை மையமும், ஏத்தாபூரில் உள்ள மரவள்ளி மற்றும் ஆமணக்கு

ஆராய்ச்சி நிலையமும் மற்றும் சந்தியூரில் உள்ள வேளாண் அறிவியல் நிலையமும் இணைந்து நடத்தினர்.

இந்நிகழ்ச்சியில் ஏத்தாபூர் நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர், முனைவர் செ.மாணிக்கம் வரவேற்புரை வழங்கினார். விரிவாக்க கல்வி இயக்குநர் முனைவர்.ஹ.பிலிப் மற்றும் விதை தொழில்நுட்பவியல் பேராசிரியர் மற்றும் தலைவர், முனைவர்.பொ.செல்வராஜு ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர். சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர்.நா.ஸ்ரீராம் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்